கொள்ளமுடியும்? தயவுசெய்து இந்தப் பிரச்சினையை இத்தோடு விட்டுவிடலாம். மற்ற உறுப்பினர்கள் யாரும் உட்கார்ந்துகொண்டே எத்தகைய சொற்றொடரையும் பயன்படுத்தக் கூடாது.

3. கவன ஈர்ப்பு.

மாண்புமிகு பேரவைத் தலைவர் :

அவசரப் பொதுமுக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வு குறித்த கவன ஈர்ப்பு. திரு. கே. செல்வராஜ், இருக்கையில் இல்லை

திருப்பூர் தனலட்சுமி ஆலையில் தொழிலாளர்களின் வேலை நிறுத்தம் குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்த கவன ஈர்ப்பு. திருவாளர்கள் ஜி. பழனிசாமி, வெ. பழனிசாமி ஆகியோரில் ஒருவர் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை, மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவருவார்கள். திரு. ஜி. பழனிசாமி.

திரு. ஜி. பழனிசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ''திருப்பூர் தனலட்சுமி ஆலையில் 12-3-1993 முதல் தொழிலாளர் மேற்கொண்டுள்ள வேலை நிறுத்தம் குறித்து'' மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. சே. ரகுபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுகுறித்து விவர அறிக்கை ஒன்று அவைமுன் வைக்கப்பட்டுள்ளது.

அறிக்கை

திருப்பூரிலுள்ள தனலட்சுமி மில்ஸ் நிறுவனத்தில் சுமார் 1,200 தொழிலாளர்கள் பணிபுரிகின்றனர். இந்த நிறுவனத்தில் பணியாற்றும் தொழிலாளர்களின் சார்பில் ஐ.என்.டி.யு.சி. என்.எல்.ஓ., எல்.பி.எப்., எச்.எம்.எஸ்., ஏ.டி.பி., சி.ஐ.டி.யு., ஏ.ஐ.டி.யு.சி., மற்றும் தனலட்சுமி மில்ஸ் ஒர்க்கர்ஸ் ஸ்டாப் யூனியன் ஆகிய தொழிற் சங்கங்கள் இயங்கி வருகின்றன. இந்த நிறுவனத்தில் உள்ள கோன் வைண்டிங் பிரிவில் தொழிலாளர்

குறியீட்டினை எட்டாத மெதுவாக வேலை செய்யும் போக்கின் காரணத்தால் உற்பத்திக்கு பாதகம் ஏற்பட்டதுடன் இதனைத் தொடர்ந்து ஸ்பின்னி மற்றும் இதரப் பிரிவினருக்கு வேலை அளிக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது என்றும் அதனால் அந்த பிரிவு தொழிலாளர்களுக்கு ''லே ஆப்'' வழங்கப்படும் என்றும் இதற்கு லே ஆப் நட்ட ஈடு ஏதும் வழங்க இயலாது என்றும் நிர்வாகம் 12-3-1993 அன்று அறிவிப்புச் செய்ததை ஆட்சேபித்து 15-3-1993 முதல் தொழிலாளர்கள் வேலை நிறுத்தம் செய்தனர்.

தொழிலாளர் துறை அலுவலர்களின் சமரச முயற்சியால் 24-3-1993 அன்று தனலட்சுமி மில் நிர்வாகத்தினருக்கும் தொழிலாளர்களுக்கும் இடையில் தொழிலாளர் சட்ட பிரிவு 18 (1)-ன் கீழ் ஒரு சுமூகமான உடன்பாடு ஏற்பட்டது. அதன் படி தொழிலாளர்களும், தொழிற்சங்கங்களும் ஒத்துழைப்பு கொடுப்பதாக அளித்துள்ள வாக்குறுதியினை கருத்தில் கொண்டு இடைக்கால நிவாரணத் தொகையாக மாதமொன்றுக்கு ரூ. 125 மற்றும் ரூ. 75 (26 வேலை நாட்களுக்கு) ஏ மில் தொழிலாளர்களுக்கு கொடுப்பதாக ஒப்புக்கொள்ளப்பட்டு டிசம்பர் 1992, ஜனவரி 1993, பிப்ரவரி 1993 ஆகிய மூன்று மாதங்களுக்கான மேற்படி இடைக்கால நிவாரணத்தொகையை 31-3-1993-ம் தேதிக்குள் பட்டுவாடா செய்வதாக ஒப்புக்கொள்ளப்பட்டது.

அரசாணை எண். 1282 (தேதி 26-12-1992-ல்) கூறப்பட்டுள்ள ஒட்டு மொத்த தொகை (லம்ப்சம் பெமெண்ட்) ரூ. 750 மற்றும் ரூ. 450-ஐ 25-7-1993-ம் தேதிக்குள் பட்டுவாடா செய்வதாக ஒப்புக் கொள்ளப்பட்டது.

இந்த ஒப்பந்தத்தின்படி 25-3-1993 முதல் ஆலை செயல் துவங்கியுள்ளது.

திரு. ஜி. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோவை மாவட்டம், திருப்பூரில் தனலட்சுமி மில்லிலே கடந்த 12-ஆம் தேதி முதல் அந்த தொழிலாளர்கள் 1500-க்கு மேற்பட்டவர்கள் வேலைநிறுத்தத்திலே ஈடுபட்டுள்ளனர். அந்த மில்லிலே வேலை செய்யக் கூடியவர்கள், மாதாமாதம் 10-ஆம் தேதி சம்பளம் வாங்கிக் கொண்டு வரக் கூடிய நிலையிலிருந்து அந்த நிறுவனம் ஓராண்டுக் காலமாக 10-ஆம் தேதி சம்பளம் வழங்குவதை அவர்கள் நிலுவையிலே வைத்துள்ளனர். அரசு அறிவித்த இடைக்கால நிவாரணம்கூட ரூ. 250-ஐ அவர்கள் கொடுக்க மறுத்துள்ளனர். அதேபோல் சம்பள உயர்வாக ரூ. 125-யும் நிர்வாகம் வழங்கவேண்டுமென்ற அறிவித்ததையும் இன்றைய வரையிலேயும் வழங்காத போக்கிலேயும் இன்றையதினம் நிர்வாகம் இருந்துகொண்டிருக்கிறது.

அதேபோல் போனஸ்—1991–92-ஆம் ஆண்டுக்கான போனஸ் தொகைகளைக் கூட அந்த தொழிலாளர்களுக்கு வழங்காமல் இருக்கிறார்கள். மில் கூட்டுறவுப் பண்டகசாலையில் தொழிலாளர்களிடமிருந்து பிடிக்கக் கூடிய அந்தப் பணத்தையும் அந்த பண்டகசாலைக்கு அவர்கள் வழங்காமல் அந்தத் தொழிலாளர்கள் வாங்கக்கூடிய, அரிசி, சர்க்கரை, மண்ணெண்ணெய் போன்ற பொருள்களைக் கூட வாங்க முடியாத அளவிற்கு அந்தத் தொழிலாளர்கள் மிகவும் பாதிக்கப் பட்டுள்ளனர். தொழிலாளர்களிடமிருந்து பிடித்திருக்கிற பி.எப். பணத்தை கூட இன்று வரையிலும் அவர்கள் அந்த அலுவலகத்திற்கு செலுத்த முடியவில்லை. அதேபோன்று நிர்வாகம் மூலமாக தவணை முறையிலே வழங்கி வந்த, 2 தொழிலாளர்களுக்கு பிடித்தம் செய்திருக்கக் கூடிய தவணைத் தொகையை கூட நிர்வாகம் வழங்கவில்லை. ஆனால் இன்றையதினம் அமைச்சர் அவர்கள் அறிவித்திருக்கிறார்கள். ஒப்பந்தங்கள் செயல்படுவதாக. ஆனால் குறிப்பாக பல்வேறு ஒப்பந்தங்கள் அங்கே செய்யப்பட்டு இன்று வரையிலும் அந்த ஒப்பந்தங்கள் அங்கே முழுமையாக அமல் படுத்த முடியாத ஒரு சூழ்நிலை இருக்கிறது. அது மட்டுமல்ல தொடர்ந்து (மணியடிக்கப் பெற்றது.)

முற்பகல் 11-35

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர் :</u> கேள்வியாகக் கேளுங்கள்.

<u>திரு. ஜி. பழனிசாமி :</u> கேள்விதான் சொல்கிறேன். இங்கே கொடுக்கப்பட்டிருக்கிற குறிப்பில் தொழிலாளர்களிடையே ஏற்கெனவே ஒரு ஒப்பந்தம் செய்யப்பட்டிருப்பதாக தெரிவிக்கப்பட்டிருக்கிறது. அந்த ஒப்பந்தம் மீறக்கூடிய நிலைமை இருக்கிறது. ஆனால் அரசாங்கம் அவர்களிடையே உள்ள ஒப்பந்தம் ஏற்கப்பட்டுள்ளதாகவும் பணம் வழங்கப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் அவர்கள் தன்னுடைய குறிப்பிலே கொடுத்திருக்கிறார்கள். ஆகவே ஏற்கெனவே செய்யப்பட்ட ஒப்பந்தம் 30–4–1993 தேதிக்குள் அவர்களுடைய சம்பள பாக்கிகளை தொழிலாளர்களுக்கு ஒப்படைக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்ளப்பட்டது. ஆனால் இதுவரையிலும் வழங்கப்படவில்லை. உடனடியாக அரசு அதற்குரிய நடவடிக்கையை எடுக்குமா? அதேபோன்று இன்னொன்றை சொல்லுகிறார்கள். அங்கே ஏ, பி என்று இரண்டு மில்கள் இருக்கின்றன. அந்த ஏ மில்லிலே பணியாற்றக் கூடிய தொழிலாளர்களை, பி.மில்லிலே ஏற்படுகிற தவறுகளை காரணம் காட்டி, ஏ.மில்லிலே இருக்கக்கூடிய தொழிலாளர்களை பழி வாங்குகின்ற ஒரு போக்கு நடக்கும் நிலையிலே இருந்து அரசு உரிய நடவடிக்கையை எடுத்து அந்த தொழிலாளர்களுக்கு வாழ்வளிக்க முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சே. ரகுபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் 12—3—1993 அன்று ஏற்பட்ட அந்தத் தொழிலாளர்களுடைய போராட்டம் குறித்து கவன ஈர்ப்பைத்தான் கொண்டு வந்திருக்கிறார். அது ஏ மில் சம்பந்தப்பட்டதுதான். அதற்காக தொழிலாளர் நலத் துறை அலுவலர்கள் சமரச முயற்சியிலே ஈடுபட்டு நிர்வாகத்திற்கும் அங்கே இருக்கக் கூடிய அனைத்துத் தொழிற் சங்கங்களைச் சேர்ந்தவர்களுக்கும் இடையே 24—3—1993 அன்று சமரச ஒப்பந்தம் 18(1) செட்டில்மெண்ட் ஏற்படுத்தி இருக்கிறார்கள். எனவே, அதன்படி அரசினுடைய இடைக்கால நிவாரணங்கள் வழங்குவதற்கு 31–3–1993-க்குள் பட்டுவாடா செய்வதாக ஒப்புக்கொள்ளப்பட்டு இருக்கிறது. கடந்த ஆண்டு போனசை அவர்கள் 25–7–1993-க்குள் கொடுப்பதாகவும் தொழிலாளர்களும் நிர்வாகமும் ஒப்புக் கொண்டு, 25—3—1993 முதல் அந்த ஆலை இயங்கி வருகிறது. இப்போது எந்தவிதமான பதட்ட நிலையும் அங்கே இல்லை என்பதைக் குறிப்பிட விரும்புகிறேன். இப்போது அந்த ஆலை இயங்கிக் கொண்டிருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. வெ. பழனிசாமி.

திரு. வெ. பழனிசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருப்பூர் தனலட்சுமி ஏ மில் பி மில் ஆகிய இரண்டு ஆலைகளும் நவீன இயந்திரங்களோடு நல்ல முறையில் ஓடிக் கொண்டிருக்கிற ஆலைகள் ஆகும். ஆனால், அந்த ஆலையில் 12—3—1993ஆம் தேதியன்று வேலை நிறுத்தம் தொடங்கி, 24—3—1993ஆம் தேதியன்று வேலை நிறுத்தம் பேச்சு வார்த்தை மூலமாக முடிவுக்குக் கொண்டுவரப்பட்டிருக்கிறது. அதிலே, கோன்வைண்டிங் என்று சொல்லுகிறார்கள், அதில் தாமதமாக வேலை செய்த காரணத்தினாலே என்று அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. அது மட்டும் காரணம் அல்ல என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன். காரணம் ஏற்கெனவே 1991–92ஆம் ஆண்டு போனசை இன்று வரையில் பட்டு வாடா செய்யவில்லை. அரசு ஆணை எண். 1282, நாள் 20—12—1992-ல் குறிப்பிடப்பட்டுள்ள லம்ப்சம் தொகை 750, 450 என்ற அடிப்படையில் கொடுக்கப்பட் வேண்டும் என்பதும் பட்டுவாடா செய்யப்படவில்லை. மாறாக அந்தத் தொழிற்சாலையில் ஏற்கெனவே பணியாற்றியிருக்கிற தொழிலாளர்களுக்கு கடந்த 3 மாத காலமாக சம்பள பாக்கியையும் வைத்துக் கொண்டிருக்கிறார்கள் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன். நல்ல நிலையில் ஓடிக் கொண்டிருக்கிற, நவீன இயந்திரங்களோடு ஓடிக் கொண்டிருக்கிற ஒரு மில்லை திட்டமிட்டு நிர்வாகக் கோளாறுகளின் காரணமாக அந்தத் தொழிலாளர்களுக்கு அரசு ஆணைப்படி அமல் படுத்தாமல் வருவது என்பது திட்டமிடப்பட்ட ஒரு செயல் என்பது என்னுடைய

கருத்தாகும். ஆகவே, 24—3—1993 ஆம் தேதி அன்று போடப் பட்டிருக்கிற ஒப்பந்தத்தை முழுவதுமாக அமல் படுத்துவதற்கு அரசு கவனத்தில் எடுத்துக் கொள்ளவேண்டும் என்று நான் கேட்டுக் கொள்வதோடு, அந்த ஆலைகளைப் பொறுத்த வரையில் முழுவதுமாக நிர்வாக கோளாறுகளின் காரணமாக கடந்த ஆண்டு வழங்க வேண்டிய இரண்டு போனசும் வழங்கப்படவில்லை. சம்பளம் முழுவதுமாக பட்டுவாடா செய்யப்படவில்லை. மூன்றாவதாக 2ஆவது மில்லான பி மில்லை இன்று வரையில் ஓட்டுவதற்கான முயற்சி மேற்கொள்ளப்படவில்லை என்பதையும் தெரிவித்து, 1,300 தொழிலாளர்கள் பணியாற்றுகிற இந்த திருப்பூர் தனலட்சுமி ஏ மில், பி மில் ஆலைகளை அரசு கவனத்தில் எடுத்துக் கொண்டு தொடர்ந்து அந்த தொழிலாளர்களுக்கு வேலை கிடைக்கிற ஒரு சூழ்நிலையும் உருவாக்க வேண்டும். சம்பளம், போனஸ் போன்றவற்றை பட்டுவாடா செய்யக் கூடிய நல்ல சூழ்நிலையையும் உருவாக்குவதற்கு முயற்சிக்க வேண்டும். அதற்கு அரசு முயற்சி எடுக்குமா என்று நான் அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 11–40

மாண்புமிகு திரு. சே. ரகுபதி : பேரவைத் தலைவர் அவர்களே, திருப்பூர் தனலட்சுமி மில்லினுடைய "ஏ" மில் குறித்து 24—3—1993 அன்று ஏற்பட்ட அந்த ஒப்பந்தத்தை அமல் படுத்துவதிலே தொழிலாளர் நலத்துறை முழு கவனம் செலுத்தி, தொழிலாளர்கள் அந்த ஒப்பந்தத்தை அமல்படுத்துவதற்கு நிச்சயமாகப் புரட்சித் தலைவியினுடைய அரசு முழு ஒத்துழைப்புத் தரும் என்பதையும், போனஸ் மற்றும் பிரச்சினைகள் குறித்து ஏற்பட்டிருக்கின்ற பிரச்சினைகளையும் புரட்சித் தலைவியினுடைய அரசு தீர்த்து வைக்கும் என்பதையும் அரசினுடைய அறிவிப்புகளை அரசு ஆணை எண். 1288, நாள் 20–12–1992-ல் கூறப்பட்டுள்ள அனைத்துச் சலுகைகளும் அந்த மில்லினுடைய தொழிலாளர்கள் பெறுவதற்கு தொழிலாளர் நலத்துறை முயற்சி எடுத்து பெற்றுத்தரும் என்பதையும் இங்கே நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

4. அறிவிப்பு.

எதிர்பாராச் செலவு நிதியத் (திருத்தச்) சட்டமுன்வடிவு, 1993 (ஆ.செ.)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 1993-ஆம் ஆண்டு தமிழ்நாடு எதிர்பாராச் செலவு நிதியத் (திருத்தச்) சட்டமுன்வடிவைப் பேரவைக்கு அறிமுகம் செய்யவும், ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளவும் மேதகு ஆளுநர் அவர்கள் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்கள்.